**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.63/2023 தேதி- 17.03.2026
(DW.1) – சுரேஷ்குமார்

**<u>குறுக்கு விசாரணை</u>**-

1. நான் இந்த வழக்கில் 2 வது பிரதிவாதி என்றாலும், எனக்கு இந்த வழக்கின் விவரங்கள் எல்லாம் தெரியும் என்றால் சரிதான். 1 வது பிரதிவாதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். என் மனைவி 8 சென்ட் கேசவதாஸ் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார் என்றால் இல்லை, கிருஷ்ணன் ஆசாரி என்பவரிடமிருந்து 8 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கத்தில் கிருஷ்ணதாஸ் என்பவரிடமிருந்து மோகன் 10 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் வாங்கியிருக்கலாம்.

2. மேற்படி மோகனின் மனைவி அம்பிகா மேற்சொன்ன கிருஷ்ணதாசிடமிருந்து வழிப்பாதைக்காக 2 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் வாங்கியிருக்கலாம். மேற்படி மோகன் என்பவர் என் உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். மோகன் மற்றும் அம்பிகா விலைக்கு வாங்கிய சொத்தின் மீது எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். மோகன் மற்றும் அம்பிகா சேர்ந்து 11.995 சென்ட் சொத்தை ராஜ் என்பவருக்கு விலைக்கு கொடுத்தார் என்றால் சரிதான்.

3. மேற்படி ராஜ் என்பவர் தான் 11.995 சென்ட் இவ்வழக்கின் வாதியான ராகினி என்பவருக்கு விலைக்கு கொடுத்தார் என்றால் கொடுத்திருக்கலாம். என் மனைவிக்கு உரிமைப்பட்ட 8 சென்ட் சொத்தை சுற்றி நான்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது என்றால் வடக்கு பக்கம் மட்டும் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு பக்கத்தில் என் மனைவி உரிமைப்பட்ட 8 சென்டிற்கு சென்று வர பாதை உள்ளது என்றால் சரிதான்.

4. வடக்கு பக்கம் எங்களுடைய எல்கையை நிர்ணயம் செய்து காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். மெயின் ரோட்டில் இருந்து என் சொத்திற்கு வரக்கூடிய பொது வழிப்பாதையில் என் வீட்டில் இருந்து 11 மீட்டர்

தொலைவிலிருந்து மெயின் ரோடு வரை காங்கீரிட் ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பொது வழிப்பாதையானது எங்கள் முன்ஜென்மிகள் 15 லிங்ஸ் சொத்தை விட்டுக் கொடுத்து வடக்கு பக்கம் உள்ள சொத்தின் உரிமையாளரும் 15 லிங்ஸ் சொத்தை விட்டுக் கொடுத்து பொது வழிப்பாதையாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

5. அந்த பொது வழிப்பாதையானது ஆதியில் என் முன்ஜென்மி அவருடைய மூன்று பிள்ளைகளுக்கு சொத்துக்களை பிரித்துக் கொடுக்கும் சமயத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது, நான் சொத்தை விலைக்கு வாங்கும் போதே பாதை இருந்தது. கான்கீரிட் பாதை முடிந்த பிறகு அதை தாண்டி பொது பாதையில்லை என்றால் சரியல்ல, பொது பாதையுள்ளது, அதை காண்பித்து தான் சொத்தை வாங்கினேன். மேற்சொன்ன பாதை யை பற்றிய குறிப்பு என்னுடைய விலை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை.

6. என் தரப்பில் மேற்சொன்னவாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் சொத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடகிழக்கு மூலையில் உள்ள கேட்டில் இருந்து காங்கீரிட் பொது பாதைக்கு செல்லும் வரையுள்ள பாதையை இந்த வழக்கின் வாதியான ராகினி எவ்வித பிரதிபலனும் இல்லாமல் நடந்து செல்ல அனுமதி வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.

7. ஆர்.டி.ஓ அலுவலகத்தில் விசாரணையின் போது என் தரப்பில் தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. என்னிடத்தில் தற்போது காண்பிக்கப்படும் ரீசர்வே வரைபடத்தில் உள்ள சர்வே எண்.2A1 எனக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த **வரைபடம் வா.சா.ஆ.5** ஆகும். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் ரீ சர்வே வரைபடத்தில் உள்ள சொத்து இந்த வழக்கின் வாதியான ராகினிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான்.அந்த **வரைபடம் வா.சா.ஆ.6** ஆகும்.

8. வா.சா.ஆ.5 ஆவணத்தில் என்னுடைய சொத்தின் வடக்கு பக்கத்தில் முன்பக்கமும் வாதியின் சொத்தையும், என் சொத்தையும் தாண்டி 11 மீட்டர் காங்கீரிட் ரோடு சென்றடையும் வரை உள்ளது என்றால் சரிதான். பத்மனாபபுரம் ஆர்.டிஓ யிடமிருந்து இரண்டு உத்தரவுகள் பெற்றுள்ளது, கிராம நிர்வாக அலுவலரை பயன்படுத்தி வாங்கப்பட்ட உத்தரவுகள் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து விசாரணைக்கு ஆஜராக கூறி எனக்கு ஒரு அழைப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடத்தில் தற்போது காண்பிக்கப்படும் அழைப்பாணை மேற்சொன்ன அழைப்பாணை என்றால் சரிதான். அந்த அழைப்பாணை வா.சா.ஆ.7 ஆகும்.

9. என் தரப்பில் நியாயம் இல்லாததால் மேற்சொன்ன மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் உள்ள விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதிக்கு உரிமைப்பட்ட சொத்தில் எல்லை நிர்ணயம் செய்து காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார் என்றால் இல்லை. சொத்தின் வடக்கு பக்கத்தில் உள்ள சொத்து வாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றாலும், அந்த சொத்தில் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பத்மனாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் பாதை அவகாசத்தை தடங்கல் செய்ய முடியாது என்று வாதி எழுதிக் கொடுத்துள்ளார்.

10. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களின் படி என் மனைவிக்கு உரிமைப்பட்ட 8 சென்ட் சொத்திற்கு வடக்கு பக்கமும், மேற்கு பக்கமும் வாதி ராகினியின் சொத்து உள்ளது என்றால் சரிதான், மூன்று பக்கமும் அவருடைய சொத்து தான் உள்ளது. ஏற்கெனவே உள்ள பாதை அவகாசம் வழங்கவேண்டுமா அல்லது சொத்தில் உரிமைவேண்டுமா என்றால் ஏற்கெனவே உள்ள பாதை அவகாசம் வழங்கப்பட்டால் போதும். நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்தை பார்வையிட்டு அளக்க என் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

11. வாதிக்கு உரிமைப்பட்ட ஆற்றூர் கிராமத்தில் ரீ சர்வே எண்.133/2A1B எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் பொது பாதையாக தற்போது உள்ளது,

அது பொது பாதையாகவே இருக்க வேண்டும் என்று தான் கோருகிறோம். வாதி ராகினி நான்கு சக்கர வாகனத்தை நிறுத்த அமைக்கப்பட்டுள்ள செட்டினால் என்னுடைய வழிப்பாதை பாதிக்கப்படுகிறதா என்றால் நான் என் பணி ஓய்வு காலத்தில் வீடு அமைக்க வேண்டும், ஆனால் அதற்கான கட்டுமான பொருட்களை கொண்டு வர இயலவில்லை.

12. மேற்சொன்ன நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் செட்டை தாண்டி தான் எனக்கு உரிமைப்பட்ட சொத்திற்கு செல்ல வேண்டுமா என்றால் ஆம். நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் செட்டை வாதியின் சொத்திற்குள் தான் வைத்துள்ளார் என்றாலும், என்னுடைய வழிப்பாதை அவகாசத்தை எவ்விதத்திலும் மேற்சொன்ன நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் செட் தடங்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.